Regd. No. M. 4593.

ஓ. எம். சுப்பிரமணியன்,

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 { ஈரோடு 25-1-1947 தை மீ 12உ { மலர் 16

## கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவர்களுடைய உழைப்பின் பலன் முதல் தடவையாக 1847ல் ஒரு புத்தகரூபமாக வெளியாயிற்று. இப்புத்தகம் வறுமையின் தத்துவம் எனப்படும். பெயருடன் பி. ஜெ. ப்ரௌடன் வெளியிட்ட புத்தகத்திற்கு மறுப்பு. முடியாட்சியிலே சமாதான முறையிலே சமஷ்டி முறையிலே தொழிலாளர்களின் கஷ்டங்களை நீக்கலாம் என்ற தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு குழப்பமான முறையில் ப்ரௌடன் எழுதியதாகும். இவருடைய முதல் புத்தகம் 'ஆஸ்தி என்பது என்ன?' என்பது. இதைக் கௌரவித்ததால் தன்னைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொண்டார். இதற்குக்காரணம் பாமரர்களின் அறியாமையேயாகும். தாம் இரண்டாவது எழுதி வெளியிட்ட புத்தகத்தை மார்க்சின் பார்வைக்கு அனுப்பி அதற்கு அழகிய விமர்சனம் எழுதச் சொன்னார். மார்க்ஸ் இத்தகைய சந்தர்ப்பம் எப்பொழுதுகிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தார். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல் இப்புத்தகம் இவரது பார்வைக்கு வரவும் சரியான புத்தி கற்பித்து அவரது அகம்பாவத்தை அடக்க வேண்டுமென்று கருதினார். தத்துவ சாஸ்திரத்தைத் தர்க்கிக்கும் முறையிலே பொருளாதார சாஸ்திரத்தையும் விளக்கியிருந்தார் ப்ரௌடன், தத்துவ சாஸ்திரியான ஹெகலியனையும், ஹெகலியின் குறைகளையும் நன்கறிந்த ஒரு வாலிபர், இந்தச் சந்தர்ப்பத்தை இழக்கத் துணிவாரா? வெகு சுலபமாக மார்க்ஸும், எஞ்சல்ஸும் இவைகளை விளக்கி ஒரு சிறு புத்தகம் வெளியிட்டார்கள். ப்ரௌடனுடைய விளக்கமில்லாத, திருத்தமில்லாத, அர்த்தமில்லாத, ஆதாரமில்லாத வாதங்கள் இப்புத்தகத்தில் புட்டு புட்டுக் காட்டப்பட்டன. ப்ரௌடன் வாதங்களைக்கண்டுமக்கள் நகைக்கலாயினர். மார்க்ஸ் எழுதிய புத்தகம் முழுவதும் சரி என்றோ அல்லது முழுவதும் தப்பானவைகள் என்றோ இன்று கூறிவிடமுடியாது. ஆனால் அக்காலத்தில் பெரிய மனமாற்றத்தையும் முடிவையும் ஏற்படுத்திவிட்டது. ஒரு சர்வகலாசாலையில் இருக்கும் ப்ரௌடனை இவ்வளவு அற்பமாக மதித்துத் துணிச்சலோடு எழுதிய சிறுவனை எப்படி விட்டுவைப்பது என்ற எண்ணமே அவரது மனதை வாட்டிக்கொண்டிருந்தது. பொதுஜனங்கள் ப்ரௌடனை முட்டாள் என்று கருதும்படி செய்துவிட்ட செய்கை இலேசானதா? மார்க்ஸுக்கு எங்கும் வெற்றி. இவரது பெயர் எங்கும் பரவலாயிற்று. இவருக்குப் போலீஸ் காவலும் வைக்கப்பட்டது. புரட்சித் தலைவராகவும் கருதப்பட்டார்.

### புரட்சி மனப்பான்மை

பிரஸ்ஸல்ஸில் இவர்கள் தர்க்க சாஸ்திர புத்தகங்கள் எழுதுவதில் மட்டும் தாங்கள் பொழுதைப் போக்கவில்லை. பாட்டாளி மக்களோடு உறவு கொள்ளவும் சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் முயற்சி செய்தார்கள். இதற்காக ஒரு திட்டம் வகுத்தார்கள். அத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதன்படி ஜர்மன் தொழிலாளர் சங்கமொன்று நிறுவினார்கள். ஒரு சிறு பத்திரிகையொன்றை இதற்கென நடத்தினார்கள். இவர்களுடைய சொற்பொழிவுகளாலும் விசாரணையாலும் நீதிக் கட்சி சங்கம் என்ற பெயரால் இருந்துவந்த புரட்சிகரமான ரகசிய ஜர்மன் தொழிலாளர் சங்கம் இவர்களுக்குத் தெரிய வந்தது. இதன் தலைமைஸ்தானம் லண்டன். இதன் நோக்கம் உன்னதமானது. . ஆனால்

தெளிவானதல்ல. பிரஸ்ஸல்ஸில் விஞ்ஞான முறைப்படி புரட்சி கற்பிக்கப்படுகிறது என்பதை இச்சங்கத்தார் அறிந்து தங்கள் சங்கத்தின் பிரதிநிதியை 1847 ஜனவரி மாதம் பிரஸ்ஸல்ஸுக்கு அனுப்பினார்கள். இவர் வந்துபோனதின் பயனாக எஞ்சல்ஸ் 1817ம் வருடம் கோடையில் நடந்த மகாநாட்டுக்கு விஜயம் செய்தார். இம்மாநாட்டில் நீதிக்கட்சி என்றிருந்த பெயர் பொதுவுடைமைக் கட்சி என்ற பெயராக மாற்றப்பட்டது. இரு தோழர்களுடைய நோக்கங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

அடுத்தாற்போல் நவம்பரில் ஒரு காங்கரஸ் கூடிற்று; (இவ்விரு கூட்டங்களும் லண்டனில் கூடின.) இதில் இருவர்களும் கலந்துகொண்டனர். ஏன்? இக்கூட்டத்தை இவ்விருவர்கள்தான் நடத்தினார்கள் என்று சொல்லவேண்டும். இவர்களுடைய கோட்பாடுகள், பிரசங்கங்கள் எல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டதோடு எத்தனை மொழிகளில் பிரசுரிக்க முடியுமோ அத்தனை மொழிகளிலும் பிரசுரிக்கும்படி முடிவு செய்யப்பட்டது. இந்தப் பிரசுரம்தான் பின்னால் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ என்று பிரபல்யப்படலாயிற்று. மனித சுதந்திரம் என்று பிரஞ்சு மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையைவிட மனித சரித்திரத்திலே இந்த அறிக்கையே பெரிய பொக்கிஷமாக விளங்கலாயிற்று.

அக்காலத்தில் அது வெளியானவுடன் அவ்வளவாகப் பாராட்டப்படவில்லை. ஏனெனில் அப்பொழுது நிகழ்ந்துவந்த சம்பவங்கள் புரட்சிக்காரர்களுடைய மூளையைக் கலக்கின. திட்டங்களைப்பற்றி யோசிக்க அவர்களுக்குச் சாவகாசம் கிடையாது.

மார்க்ஸ் பிறந்த முப்பதாண்டுக்குள் பிறந்த ஊராகிய திரெவைமட்டுமல்ல, ஐரோப்பாவிலுள்ள எல்லா சிறு சிறு நாடுகளும் அடியோடு மாறிவிட்டன. இங்கிலாந்திலிருந்த இயந்திரங்களும் முதலாளித்துவமும் இக்கண்டம் முழுவதும் பரவலாயின. இரயில்கள் தூரப்பிரதேசங்களை ஒன்றோடொன்றாக இணைத்துவிடலாயின. ஆலைகளும், சுரங்கங்களும், தொழிற்சாலைகளும் பரந்துகிடந்த மக்களை ஒரே யிடத்தில் குவியச்செய்தன. தொழிலாளிகளை வறுமையிலும் பிணியிலும் அவதியுறச் செய்தன. கொடியவர்களுக்கு நிறைந்த செல்வத்தை அளித்தன. அவர்களைக் கொழுக்கச் செய்தன. தொழிலாளி மக்களை எலும்பும் தோலுமாக ஊசலாடித் திரியச்செய்தன. எங்ஙனம் பூமிக்குமேல் உள்ளவைகள் இன்பமாக உல்லாசமாக இருக்க பூமிக்கடியில் ஒருவித நெருப்புக் குழம்பான வஸ்து குமுறிக்கொண்டிருக்கிறதோ அதேபோல் அரசர்களும், சீமான்களும், சான்சலர்களும் பிரிவி கௌன்சிலர்களும், கிராண்டுயூக்குகளும் உல்லாசமாக, கௌரவமாக இருக்க மற்றொருபுறம் கோடிக்கணக்கான மக்கள் குமுறிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் விலங்கிடப்பட்ட விலங்குகளை ஒத்தவர்களாகவே இருந்தார்கள். இந்த மனித விலங்குகள் அவ்வாறு கட்டுண்டு வாயில்லா விலங்கைப் போன்று விளங்கினதற்குக் காரணம் தங்களது சக்தியை உணராததேயாகும். சக்தியை உணர்ந்துவிட்டால் மின்சார ஸ்விச் போட்டமாதிரி க்ஷணப்பொழுதில் அவர்களது விலங்கு பொடிப்பொடியாய் விடும்.

(தொடரும்)

## இயக்கச் செய்திகள்

3-1-47 மாலை 6-30 மணிக்குத் தம்மம்பட்டிச் சுருட்டு பீடித் தொழிலாளர் சங்கக் கட்டிடத்தில் புதிதாகத் திரட்டப்பட்ட, திராவிடர் கழக உறுப்பினர்கள் திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் நடத்தினர். தோழர்கள் வெ. துரைசாமி தலைவராகவும், வீ. ராமதாஸ் உபதலைவராகவும், வ. சுப்பையா செயலாளராகவும், அங்கமுத்து உதவிச் செயலாளராகவும், சுந்தரராஜு பொருளாளராகவும், தாசர்பாஷா, இ. துரைசாமி, தண்டபாணி, ரங்கசாமி, வெள்ளையன் ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலவச சிகிச்சை இலவச சிகிச்சை

அடியிற்கண்ட வியாதிகளுக்கு நேரில் பூரா

இலவச சிகிச்சை

வி. பி. மூலம் விரும்புவோருக்கு:-

இளம் பிள்ளை வாதம், பாரிசவாய்வு, குஷ்டம், யானைக்காலுக்கு (தாம்பரக்குளிகை) எல்-லெப்ரோ ந 5, வெட்டை, ஆஸ்த்மா, இருமல் மற்றும் உஷ்ணரோகங்களுக்கு கிளாப்போ ந 3, போக சக்திக்கு (இரு பாலருக்கும்) மாதவிடாய கோளாறு, ரத்தக்குறைவு முதலியவைகளுக்கு பிளாட்டோ ந 3, சகல பல் வியாதிகளையும் போக்கி, பல் கூட்டத்தையும் உறுதிப்படுத்தும் ஸ்ரீ கிருஷ்ணா டேண்டல் பாம் முதல் தரம் அணா 8. இரண்டாந்தரம் அணா 4 (30வருட அனுபவம்)

Dr. M. R. ராஜகோபாலன் L. I. M. B. C.,

தேவி தர்மவைத்தியசாலை, மன்னப்பிள்ளைதெரு, மன்னார்குடி (P. O.)

# காஞ்சிகோயிலில் பெரியார் ஈ.வெ.ரா. பேச்சு

## காங்கரஸ் தோழர்களுக்குப் பெரியார் அறைகூவல்

ஈரோட்டிற்கு 17 மைல் தூரத்திலுள்ள காஞ்சிக்கோயில் என்னும் கிராமத்தில் 20-1-47ல் ஈரோடு தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்

பெரியார் அவர்கள் தமது கோஷ்டியாருடன் காஞ்சிக்கோவிலில் செல்லும்பொழுது சுவரில் 'சாமி இல்லை என்று சொல்லும் பாவி ராமசாமி ஒழிக' என்று ஒருசில இடங்களில் எழுதியதற்குப் பதில்கூறும் முறையில் பெரியார் தமது சொற்பொழிவைத் துவங்கினார். பின்னர் அவர் பேசியதின் முக்கிய பகுதிகளாவன:

'இன்று நாங்கள் செய்துவரும் இந்தத் திராவிட கழகப் பிரசாரத்துக்குப் பார்ப்பனர்கள் எதிரிகள்; காங்கரஸ்காரர்கள் எதிரிகள்; கம்யூனிஸ்டுகள் எதிரிகள்; மதவாதிகள் எதிரிகள்; இவர்கள் எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் இவற்றிற்கெல்லாம் பார்ப்பனர்களே தலைவர்கள். பார்ப்பனர்கள் பிழைப்புக்கு ஆதாரவளிப்பதற்கே இந்த ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஆதலால் நாங்கள் இந்த எதிர்ப்புக்களைச் சமாளித்தால்தான் எங்கள் வேலை நடைபெற முடியும்.

### பார்ப்பானும் கல்லும் சாமிகளா?

நான் "சாமி இல்லை" என்று சொல்லுவதாகவே வைத்துக்கொள்ளுங்கள். அதற்காக இந்த ஆள்களுக்கு என் ஆத்திரம் வரவேண்டும்? இன்று நீங்கள் யாரை "சாமி" என்கிறீர்கள்? பார்ப்பானைத்தானே "சாமி" என்கிறீர்கள். பிறகு கல்லுகளையும் பொம்மைகளையுந்தானே "சாமி" என்கிறீர்கள். இவை 'சாமி' ஆகுமா?

நீங்கள் எதற்காக மனிதனை "சாமி" என்று கூப்பிடுகிறீர்கள்? எதற்காக மனிதனை "சாமி" என்று கூப்பிட்டு கையெடுத்துக் கும்பிடுகிறீர்கள்? மற்றும், கல் பொம்மை சாமிகளும் பார்ப்பான் மாதிரித்தானே செய்து வைக்கப்பட்டிருக்கின்றன? பார்ப்பானுக்கு உச்சிக்குடுமி என்றால் சாமிக்கும் உச்சிக்குடுமி! பார்ப்பானுக்குப் பூணூல் என்றால், சாமிக்கும் பூணூல்! பார்ப்பானுக்குப் பஞ்சகச்சம், வேட்டி என்றால் சாமிக்கும் பஞ்சகச்சம், வேட்டி! பார்ப்பானை நாம் தொடக்கூடாது என்றால், சாமியையும் நாம் தொடக்கூடாது! பார்ப்பானை நாம் தொட்டால் தோஷம் என்றால், சாமியையும் நாம் தொட்டால் தோஷம்! இப்படியாகப் பார்ப்பானும், பார்ப்பானைப்போல் உருக்கியும், அடித்தும் வைத்த பொம்மைகளும், எழுதி வைத்த சித்திரங்களும்தான் 'சாமிகளாக இருக்கின்றனவேதவிர, வேறு எது உங்களுக்குச் சாமியாக இருக்கிறது? இந்தச் சாமிகளை நாங்கள் 'சாமிகள் அல்ல' என்கிறோம். இதில் தப்பு என்ன? நீங்கள் சொல்லுங்கள், எதற்காக ஒருமனிதனை சாமி என்று கூப்பிடுவது? அந்த மனிதன் எந்த விதத்தில் உங்களைவிட மேலானவன் ஆவான்? நம் ஜனங்களுக்கு வெட்கமில்லை; மானமில்லை; என்பதல்லாமல் வேறு என்ன? இந்த ஊரில் ஒன்றோ இரண்டோ, பார்ப்பன வீடுகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பார்ப்பனரின் விஷமச் செய்கைதான் சுவரில் இப்படி எழுதச் செய்தது என்றும் சொன்னார்கள்.

### பார்ப்பனராஜ்யமே சுயராஜ்யம்!

உங்களுக்குச் சாமியைப்பற்றி புத்தி எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு புத்திதான் உங்களுக்குச் சுயராஜ்யம் பொதுவுடைமை, நேதாஜி, ஜெய் ஹிந்த், என்பவைகளைப்பற்றியும் இருக்கிறது. 'சுயராஜ்யம்' என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? சுயராஜ்யம் என்றால் பார்ப்பான் மந்திரி. பார்ப்பான் பெரிய அதிகாரி பார்ப்பான் கொள்ளை என்பதல்லாமல் வேறு மாறுதல் என்ன என்று கேட்கிறேன். உங்களுக்கு சுயராஜ்யம் வந்தால் பார்ப்பானுக்குச் சாமிப்பட்டம், பிராமணப்பட்டம், மேல்ஜாதிப்பட்டம், போய்விடுமா? அல்லது உங்களுக்குச் சுயராஜ்யம் வந்தால் உங்களுக்குள்ள சூத்திரப்பட்டம்; பஞ்சமப்பட்டம், கீழ்ஜாதிப்பட்டம், போய்விடுமா? சொல்லுங்கள் பார்ப்போம்! அல்லது, இங்கு யாராவது காங்கரஸ்காரர் இருந்தால் இங்கு வந்து சொல்லட்டுமே பார்ப்போம். பித்தலாட்டமும், புரட்டும் சுயராஜ்யம் என்று சொல்லப்படுவதல்லாமல், யோக்கியமும், நாணயமும்தான் சுயராஜ்யம் என்று யாராவது சொல்லட்டும்! நான் இப்படிச் சொல்லுவதால் சுயராஜ்யம் வேண்டாம் என்று சொல்லுவதாக யாராவது கருதினால் அது தவறு, தவறு என்றே சொல்வேன்.

இன்று மக்களுடைய மானமற்றத் தன்மையும், மடத்தனமும், ஏமாந்தத் தன்மையும், தான் 'சாமி'யாக, 'சுயராஜ்யமாக' இருந்து வருகிறதே தவிர உண்மைக் கடவுளும், உண்மை சுயராஜ்யமும் உங்களுக்குத் தெரியவே தெரியாது. உங்களுக்கு யாரும் சொல்லவும் இல்லை! விளக்கவும் இல்லை!

### ஓரவஞ்சனை செய்யும் சாமி

உண்மையான கடவுள் ஒன்று இருக்கிறது என்றால் பாடுபடாத சோம்பேறி, பித்தலாட்டக் கூட்டத்தார் வயிறுவீங்க சாப்பிடவும், பாடுபடும் பாட்டாளி மக்கள் பட்டினி கிடந்து, உடுத்த உடையில்லாமல், இருக்க வீடில்லாமல், படிக்க எழுத்து அறிவில்லாமல் இருக்கவும் முடியுமா என்று கேட்கிறேன்? 'சாமி'யைப் பற்றிக் கவலை கொள்ளுகிற எவனுக்காவது இந்தக் குறைகளைப் பற்றிய கவலை இருக்கிறதா என்று கேட்கிறேன்.

சோவிக்கட்டி கும்பாபிஷேகம் பண்ணின ஐயர் கீழ்ஜாதியார் என்றும், சூத்திரர் என்றும், அழைக்கப்படுவதை, நடத்தப்படுவதை எந்தச் சாமியாவது தடுத்ததா? என்று கேட்கிறேன்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குடி அரசு

1947-ஆம் ஜனவரிமீ 25உ

# அரசியல் நிர்ணய சபை "மேஜிக்"

அரசியல் நிர்ணயசபைக் கூட்டம் என்னும் "மேஜிக்" ஜாலவேடிக்கைக்கூட்டம் ஒன்று டில்லியில் நடக்கின்றது.

இது இந்திய மக்களின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கும் சபையாரின் கூட்டமாம். இவர்கள் இந்தியாவின் 40 கோடி மக்களுக்குப் பிரதிநிதிகளாம். அதாவது சமஸ்தானப் பிரஜைகள் 9 கோடி பேருக்கும், முஸ்லிம்கள் 9 கோடி பேருக்கும், தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத மக்கள் 6 கோடி பேருக்கும், இவர்கள் நீங்கிய திராவிட மக்கள் அதாவது சூத்திரர், வண்ணார், நாவிதர் முதலிய குடித்தொழில் மக்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் உள்பட 4 கோடி பேர்களுக்கும் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு, பார்ப்பனரின் தலைமையில் பல வக்கீல்கள், பிரபுக்கள், ஜமீன்தார்கள், சுகஜீவிகள் கூட்டம் தலைவர்களாக, முக்கிய பேச்சாளராக, பேசத் தெரிந்தவர்களாக இருந்துகொண்டு இந்தியாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கப் போகிறார்களாம்.

இந்தமாதிரி பிரதிநிதித்துவ சபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானமும் நிறைவேறிவிட்டதாம். அதாவது "இந்தியா பூரண சுதந்திரமுள்ள குடிஅரசு நாடாக இருக்கவேண்டும்" என்ற தீர்மானம் "ஏகமனதாக" தீர்மானம் ஆகிவிட்டதாம். இனி என்ன குறை இந்தியாவுக்கு!

"பையனுக்குப் பைத்தியம் தெளிந்துவிட்டதாம்; உலக்கையை எடுத்துக்கொடுக்கும்படி கேட்கிறான், கோவணம் கட்டிக்கொள்ளுவதற்கு" என்கிற மாதிரி பார்ப்பனர், பிரபுக்கள், படித்தவர்கள் கூடி (இவர்கள் எல்லாம் சேர்ந்தே மொத்த ஜனத்தொகையில் 100க்கு 12 பேர்கள்தான்) படியாத, பாட்டாளி, ஏழை, கூலி மக்களாகிய (100க்கு 90 பேர்கள் உள்ள) கூட்டத்திற்குச் சுதந்திரக் குடிஅரசு தீர்மானம் கொண்டுவந்து இவர்களே ஏகமனதாக நிறைவேற்றிக் கொண்டார்களாம். என்ன அதிசயம்! என்ன யோகம்! இந்தியாவின் எதிர்காலம் எப்பேர்ப்பட்ட புரட்சிகாலம்! அடடா சொல்ல வேண்டுமா, இந்த மறுமலர்ச்சி சுதந்திரக் குடியரசு உதயத்தை! எழுத எழுத நாக்கில் (கண்களில்) தண்ணீர் சொட்டுகிறது.

19[illegible]4ல் லண்டனில் பார்லிமெண்டில் இந்திய சுதந்திரத்தைப்பற்றிய பேச்சு விவாதம் நடந்தபொழுது ஒரு அங்கத்தினர் சொல்லுகிறார்: என்ன சொல்லுகிறார்?

"உலகத்திலேயே கேடுகெட்ட, ஆணவம் படைத்த, கூட்டத்தாராகிய பார்ப்பனர்களுடைய கொடுமை, ஆதிக்கம் செலுத்தும் ஒரு நாட்டிற்குச் சுதந்திரம் கொடுத்து என்ன பயன்?"

'நீங்கள் எதை வேண்டுமானாலும் இந்தியர்களுக்குக் கொடுக்கப்படுவதாக வாக்களிக்கக்கூடும். ஆனால் அங்கு அந்தச் சுதந்திரத்தை யாரிடத்திலே கொடுப்பது? தாழ்த்தப்பட்டுக்கிடக்கும் மக்களைச் சுரண்டிக்கொண்டு அவர்களைத் தங்களுடைய சுயநலத்திற்குப் பயன்படும்படியாக வைத்துக்கொண்டிருப்பதற்கான பார்ப்பனர்களுக்குச் சுயராஜ்யம் கொடுக்கப்போகிறீர்கள்? இப்படிச் செய்வதற்குத்தானா, சுதந்திரம் என்று பெயர்? இந்த விஷயத்தில் நாம் யோக்கியமாக நடந்துகொள்ள வேண்டும். சர் கிரிப்சு உடைய திட்டம் தோல்வியடைந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் ஏனெனில் அந்தத் தோல்விதான் இந்தியாவின் உண்மையான நிலைமையை (இங்கிலாந்தின்) மக்களுக்கு கொண்டுவந்தது."

"ஒரு மனிதன், தான் சாப்பிடும் ஆகாரத்தை மற்றொருவன் கண்ணாலே பார்த்துவிட்ட மாத்திரத்திலேயே அந்த ஆகாரம் மற்றொரு மனிதனுக்குச் சாப்பிட முடியாதபடி தோஷம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகிற ஒரு கூட்டத்தார் ஆதிக்கம் செலுத்தும் நாட்டில் அம்மக்கள் கையில் சுதந்திரத்தைக் கொடுத்தால் அந்தச் சுதந்திரம் மற்ற மக்களுக்கு எப்படிப் பயன்படும்?"

என்பதுஆகச் சர் ஹெர்பர்ட் வில்லியம்ஸ், குடியேற்ற நாட்டுப் பிரச்சினை குறித்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், பேருக்குப் பின்னர், இந்தியாவிற்குக் குடியேற்றநாட்டந்தஸ்து அளிப்பதாகச் செய்யப்பட்டிருக்கும் வாக்குறுதியைப்பற்றிச் சர் ஹாரிஸ் என்பார் கூறியவைகளைக் குறிப்பிட்டுக் காட்டிப் பேசினார்.

இதை 'மெயில்' பத்திரிகை மாத்திரம்தான் சரியாகப் பிரசுரித்திருக்கிறது. தமிழில் 'விடுதலை' பத்திரிகையும் வெளியிட்டிருக்கிறது. மற்றபடி தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லப்படும் பத்திரிகைகள், அதாவது ஷெ பார்லிமெண்ட் மெம்பர் சர் ஹெர்பர்ட் வில்லியம்ஸ் என்பவரால் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளதான பாமர மக்களைச் சுரண்டும் கொடுமைப்

படுத்தும் ஜாதியாரால் நடத்தப்படும் பத்திரிகைகள் பெரிதும் சரியாகச் செய்தியை வெளியிடாததில் ஒன்றும் அதிசயமில்லை.

கிரிப்சு மிஷின் தோற்றுப் போனதற்குக் காரணம்வேறு எதுவாயிருந்தபோதிலும் சர் ஹெர்பர்ட் வில்லியம்ஸ் அவர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகள் சர் கிரிப்சுவிடம் தென்னாட்டு மக்களின் பிரதிநிதிகள் சொன்ன வார்த்தைகளும் அவர் நேரில் அறிந்துபோனவைகளுமேயாகும் என்பதோடு மற்றும் இந்தியாவுக்கு வந்துபோன வெள்ளையர் யாவரும் அறிந்துபோனதும், பார்த்துப்போனதுமாகும். கடைசியாகக் கிரிப்சு அவர்கள் டெல்லிக்கு வந்திருந்த சமயத்தில் அவரைச் சந்தித்த தென்னாட்டுப் பிரதிநிதிகள் சொன்ன வார்த்தை என்னவென்றால்,

"இந்தியாவை உங்கள் பிடியிலிருந்து விடுதலைசெய்ய கொஞ்சநாள் பிடித்த போதிலும், தயவுசெய்து புரோகிதர்கள் கையிலிருந்து எங்களை உடனே விடுதலைசெய்யுங்கள். இன்னும்மோசமாக எங்களைப் புரோகிதர்கள் கையில் சிக்க வைத்துவிடாதீர்கள்," என்று கேட்டுக்கொண்டார்கள். இதற்குக் கிரிப்சு அவர்கள், "இந்த விஷயங்கள் என் மனத்தை விட்டு எப்பொழுதும் அகலா. நான் இங்கிலாந்துச்சென்று அங்குள்ளவர்களுக்கும் தெரிவித்து இதற்குப் பரிகாரம் செய்கிறேன்" என்று பதிலளித்தார்.

இந்த மாதிரியான நிலைமை இந்தியாவில் இன்னும் இன்றும் இருப்பதைப் பண்டித ஜவாஹர்லால் நேருவாவது, காந்தியாராவது மறுக்க முடியுமா? அதுவும் இந்த நிலைமைகளை இந்தியாவுக்கு வந்துபோனவரும், பண்டித நேருவுக்கு நண்பரும் எப்படியானாலும் இந்தியரிடம் இந்தியாவை ஒப்புவித்துவிட்டுப் போகவேண்டும் என்றும் சொன்னவருமான சர் ஸ்டாபோர்ட் கிரிப்சு அவர்கள் இந்தியாவின் உண்மையான நிலையை அறிந்து சென்று பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துச் சொன்ன உண்மையேயாகும். இதை நன்றாய் அறிந்த பிரிட்டிஷார் இந்த நிலைமைக்கு எவ்வித பரிகாரமும் செய்யாமல் அந்த "ஆணவம்பிடித்த" பார்ப்பனக் கூட்டத்தாரிடமே நாட்டை ஒப்புவித்து உங்கள் இஷ்டப்படி, உங்கள் நலனுக்கு ஏற்ற குடியரசை நியமித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் இதில் ஏதாவது இரகசியமோ கூட்டு ஒப்பந்தமோ இல்லாமல் இருக்குமென்று யார்தான் சொல்ல முடியும். எனவேதான் இந்த அரசியல் நிர்ணயசபை என்பது ஒரு கண்கட்டு ஜாலவித்தை—ஒரு கூட்டுத்துரோகச் சதிவேலை என்று சொல்லுகிறோம்.

மேல்கண்ட இழி நிலை செம்மைப் படுத்தப்படாமல் அரசியல் நிர்ணயம் செய்யப்படுமானால் திராவிடநாடு கண்டிப்பாக D தொகுதியாக ஆக்கப்படாவிட்டாலும் C தொகுதியில் சேர்ந்துதீரும் என்பதை இப்போதே அறுதியிட்டுக் கூறுவோம்.

கோவில்கள் திறக்கப்படுவதாலும், ஓட்டல்கள் தடை நீக்கப்படுவதாலும் மாத்திரம் ஜாதி ஆணவமும், ஜாதி ஆதிக்கமும் ஒழிந்துபோகும் என்று நினைப்பவர்கள் வடிகட்டிய பைத்தியக்காரர்களே ஆவார்கள். இது ஒரு பித்தலாட்டகரமான காரியம் என்பதோடு பெரிதும் டாக்டர் அம்பேத்கார் கூட்டாகிய ஆயில்லாப்பூச்சிகளை ஏமாற்றும் வித்தையேயாகும். 16ங்கு டத்துக்கு முன் ஏமாந்து தனித்தொகுதியை விட்டுக்கொடுத்த அம்பேத்கார் கோஷ்டி இப்போதும் ஏமாந்து போகக்கூடும் என்று கருதி அம்பேத்காரை வசப்படுத்தவேறு என்ன என்னவோ சூழ்ச்சிகள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது. இவர்கள் சூழ்ச்சிகள் எல்லாம் இதுவரை முஸ்லீம்களை என்ன செய்ய முடிந்ததோ அந்த அளவுக்குத்தான் திராவிடர்களையும் ஆதித்திராவிடர்கள் என்பவர்களையும் செய்யமுடியுமே தவிர ஏமாற்றமுடியும் என்பது இனி நடக்காத காரியமாகும். அம்பேத்காரை சரிப்படுத்திக் கொண்டாலும் அதனால் வடநாட்டு ஷெடியூல் வகுப்பார்தான் ஏமாறக்கூடுமே தவிர தென்னாட்டவரை ஏய்க்க முடியாது. காங்கரசிலுள்ள தமிழ்மக்கள், திராவிடர்கள் யாவரும் (இரண்டொரு பண்டிதர்கள் தவிர) ஆரியன் கண்டாய்—திராவிடன் (தமிழன்) கண்டாய் என்று அர்ச்சனைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். தெலுங்கர்களும் ஆரியன் கண்டாய் ஆந்திரன் கண்டாய் என்கிறார்கள்.

எனவே இந்த அரசியல் நிர்ணயசபை வெறும் எண்ணெய்ச்செலவு (பணச்செலவு) தானே ஒழிய மற்றபடி (பிள்ளை) அத்தீர்மானங்கள் குப்பைதொட்டிக்குப் போகவேண்டியவைகளேயாகும்.

இப்போதைய பெரும்பாலான ஜாலவித்தைகள் எப்படிப் பார்ப்பவர்கள் பலருக்கும் புரியாவிட்டாலும் ஜாலவித்தை என்பது தெளிவாய்ப் புரிகிறதோ அதேபோல் அரசியல் நிர்ணயசபை ஜாலவித்தைகள் புரியாவிட்டாலும் ஜாலவித்தை என்பதில்-போலி,பித்தலாட்டம் ஏமாற்றுவித்தை என்பதில் எந்த ஆரியனல்லாதவனுக்கும்

## கோவை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

கோவை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் 22-1-47 மாலை 4மணிக்கு ஈரோட்டில் பெரியார் அவர்கள் இல்லத்தில் பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கோவை, திருப்பூர், பெருந்துறை, சூலூர், வெள்ளகோயில், ஈரோடு, பெத்தாம்பாளையம் முதலிய பல விடங்களிலிருந்து பல தோழர்களும் பெரியார் அவர்களும் கலந்துகொண்டனர்.

கோவை மாவட்ட முன்னாள் தலைவர் தோழர் என். அர்ச்சுனன், சேலம் தோழர் எம். ஆர். சித்தையன் ஆகியோரின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியபின் கீழ்க்காணும் தோழர்கள் கோவை மாவட்ட திராவிடர் கழகத்தின் 1947ம் ஆண்டு நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி,

உபதலைவர்: சூலூர் எஸ். கே. கருப்பண்ணன்,

பொதுச்செயலாளர்: எஸ். ஆர். சந்தானம்.

உதவிச் செயலாளர்: பி. சண்முகவேலாயுதம்.

இன்னும் ஓர் உதவிச் செயலாளர் கோவை நகர திராவிடர் கழகத்தாரால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பொருளாளர்: எம்.கே. குகநாதன்.

அமைப்பாளர்: என். இ. பாலகுரு

நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்கள்.

ஈரோடு:
1. ஈ. வி. பழனியப்பா
2. ஆர். டி. எல்லநாயகம்
3. ஆர். பாலசுப்ரமணியம்

கோபி:
1. எஸ். பி. ராமன்
2. வெங்கடாசலம்

திருப்பூர்.
1. எஸ். ஆர். சுப்பிரமணியம்
2. எஸ் என் அற்புதசாமி
3. கிருஷ்ணன்

கோவை:
1. பிள்ளார்
2. பட்டிலிங்கம்
3. ராஜமாணிக்கம்
4. இருகூர் பேச்சுமுத்து

தாராபுரம்:
1. எஸ். வீராசாமி
2. துரைசாமி

உடுமலைப்பேட்டை:
1. கே. மதியழகன்
2. கனகராசன்

பொள்ளாச்சி:
1. நரசிம்மன்
2. கிருஷ்ணசாமி

பவானி:
1. ராமு

காஞ்சிகோயில்:
1. கே பி. அவினாசியப்பன்

பின்னர் கீழ்க்காணும் தோழர் கோவை மாவட்ட திராவிடர் கழக நிதிக்கமிட்டி நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: எம். கே. குகநாதன்

உபதலைவர்: வெங்கடாசலம்

செயலாளர்: எஸ் ஆர். சந்தானம்

கமிட்டி உறுப்பினர்கள்:
1. பி. பழனிச்சாமி
2. எஸ். ஆர். சுப்ரமணியம்
3. பிள்ளார்

மாலை 6 மணிக்குப் பொதுச் செயலாளர் தோழர் எஸ். ஆர். சந்தானம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

அன்று இரவு 8 மணிக்குப் பெரியார் இல்லத்தில் வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் வந்திருந்த தோழர்கள் அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டது.

---

**சந்தேகமே இல்லை. உரைத்துப்பார்க்காமல், திருத்திப் பார்க்காமல் எடுத்தெறியப்படப்போகிறது என்பதில் சந்தேகமில்லை. எப்படியென்றால் பண்டித மோதிலால்நேரு திட்டம் 1927ல் அடைந்த கதியேபோல் "அவர் மகன்" திட்டம் 1947ல் அடையப்போகிறது—உறுதி! உறுதி! உறுதி!**

## பிறப்பு

27-10-46ல் உப்பத்தூரில் திராவிடர் கழகத் தோழர் எ. முத்தையன் அவர்களின் மனைவியார் தோழியர் தேனம்மாளுக்கு ஆண்மகவு பிறந்தது. குழந்தைக்குத் தமிழரசன் என்று பெயரிடப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு, திராவிடநாடு, விடுதலை ஆகியவற்றிற்கு ஒவ்வோர் ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

நெல்லை மாவட்டத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள், தோழியர் மணியம்மையார் ஆகியவர்கள் 26-1-47லிருந்து கீழ்க்காணும் ஊர்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

26-1-47 தூத்துக்குடி
27— அருப்புக்கோட்டை
28— தூத்துக்குடி
29— புதியம்பத்தூர்
30— குளத்தூர்
31— கீழஈரால்
1-2-47 பாளையங்கோட்டை
2— கல்லிடைக்குறிச்சி
3— கடையநல்லூர்
4—கீழக்கரை

மற்றவை பின்னால் வெளியிடப்படும்

மேற்குறிப்பிட்ட ஊர்களில் கூட்டம் நடத்துபவர்கள் தேதியின் பிரகாரம் சகல ஏற்பாடுகளும் செய்ய வேண்டுகிறேன். மேலே கண்ட தேதி மாற்றப்பட மாட்டாது. அப்படி மாற்றுவதானால் கடிதம் மூலம் அறிவிப்பேன்.

ஊழியன்,
கே. வி. கே. சாமி,
நெல்லை மா. தி. க.
8, நயினார்குளம் தெரு,
திருநெல்வேலி டவுன்.

## எதிர்பாருங்கள்!

சென்னையில்

"விமலா அல்லது விதவையின் கண்ணீர்"

எம். ஆர். ராதாவின் திராவிட மறுமலர்ச்சி நாடகக்குழுவினரால் சென்னை சௌந்தர்ய மஹாலில் 12-2-47ல் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் "விமலா அல்லது விதவையின் கண்ணீர்" என்ற நாடகம் கழகநிதிக்காக நடைபெறலாம். அதுபோது பெரியார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்து ஷ நாடகத்திற்குத் தலைமைதாங்குவார். விபரம் பின்னர் வெளிவரும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அதுபோலவே, எந்த சுயராஜ்யத்தி லாவது அல்லது இப்போது பேசப் படுகிற, கொடிகள் பறக்கின்ற மகாத்மாக்களோ, ரிஷிகளோ, வீரசூ ரன்பதிகளோ, திபாகமூர்த்திகளோ வீராங்கனைகளோ, லட்சுமிகளோ, தேவிகளோ, தலைவர்களோ இருந்து நடத்துகின்ற எப்படிப்பட்ட சுயராஜ் யத்திலாவது பிராமணன், சூத்திரன், பஞ்சமன், மிலேச்சன்— இல்லாமல் ஒரே ஜாதி மக்கள் உள்ள சுயராஜ்ய மாய் இருக்குமா என்று கேட்கி றேன்? யாராவது பதில் சொல்லட் டுமே பார்ப்போம்! இங்கு பல கொடி கள் கட்டிய கொடி வீரர்களாவது, ஜெய்ஹிந்த் கூப்பாடுபோடும் நேத்தாஜி சங்கத்தாராவது, காங்கரஸ் சமதர்மி களாவது, யாராவது சொல்லட்டுமே, பார்ப்போம்! 'சாமி' இல்லை என்கிற வனும், 'தேசத்தைக் காட்டிக்கொடுத் தவனும் வருகிறான்; ஒருவரும் போகாதீர்கள்," என்று துண்டுப் பிரசுரம் போட்டு சுவரில் எழுதி விட்டால் போதுமா? வெட்கமும் இல்லை! அறிவும் இல்லையே! என் றால், இந்தக்கூட்டத்தாரின் இழி வான வாழ்வு எதற்குப் பயன்படும் என்று கேட்கிறேன்.

சாமி இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, சுயராஜ்யம் வந்தா லும் சரி, வராவிட்டாலும் சரி, இந்த நாட்டுப் பழம் பெரும் குடிமக்களா கிய நாம் 100க்கு 90 பேர் கொண்ட திராவிடர்கள், சூத்திரர் அல்லர், அடிமைகள் அல்லர், பஞ்சமர் அல்லர், கடை சாதியார் அல்லர், மக்களை ஏமாற்றி வஞ்சித்துப் பாடுபடாமல் வயிறு வளர்க்கும் சோம்பேறிக் கூட் டத்தினரான பிராமணர் அல்லர், மேல் ஜாதியார் அல்லர். யாவரும் ஒரு குல மக்களே! சரிநிகர் மக்களே யாவரும் என்று ஆகவேண்டும். இது தான் திராவிடர் கழகத்தினரின் முத லாவதும், முக்கியமுமான குறிக் கோளாகும்

இதற்கு நீங்கள், பார்ப்பனப் பித்த லாட்ட ஸ்தாபனம் எதுவானாலும் அதிலிருந்து விலகி ஆகவேண்டும். பார்ப்பனக் கடவுளும், பார்ப்பன மத மும், பார்ப்பன தேசிய (சுயராஜ்ய) மும் தான் நம்மை இன்று இந்த இழிநிலைக்கு ஆளாக்கிவிட்டது என் றேன்!

பார்ப்பனரில் இன்று 100க்கு 100 பேர்படித்து இருக்கிறார்கள். திரா விடர்களாகிய கவுண்டர்கள், காணியா ளர்களாகிய நீங்கள் 100க்கு 90 பேர் படிப்பில்லாத, கைநாட்டுத் தற்குறி கள்! ஏன் என்று எந்தப் பார்ப்பானை யாவது கேட்டீர்களா? நீங்களாவது யோசித்தீர்களா? ஏதோ ஒரு கவுண் டர் சட்டசபை மெம்பர், ஜில்லா போர்டு பிரசிடெண்ட், பிளாக் மார்க் கெட்டில் லட்சக்கணக்காக கொள்ளை யடித்தால் போதுமா?

### பார்ப்பான் உழகின்றானா?

பார்ப்பான் பாடுபடாமல் கையில் மண்வெட்டி, களப்பை, ஏர், தொடா மல் இந்தப்பஞ்ச காலத்தில் வயிறு வீங்க சாப்பிட்டுக்கொண்டிருக்கவும், நீங்கள் எப்படிப்பட்டவர்களானா லும், காட்டுவேலை, மூட்டைத் தூக் கும்வேலை, ஆகிய உடலுழைப்பு வேலைகள் செய்து அரிசி, பருப்பு, துணிக்குத் திண்டாடவும், அதிகாரி கள் உங்களை மிருகங்களிலும் கேவல மாய் நடத்தவும், 100க்கு 90 மக்கள் இருக்கிறீர்களே! ஏன்? என்று உங் கள் சட்டசபை மெம்பர்களை, பிரசி டெண்டுகளை, கள்ளமார்க்கட் இல வாசர்களைக் கேட்டீர்களா? பார்ப் பனத் தாய்மார்கள் 18 முழம் சேலை பட்டு, ஜரிகைத்துணி ரவிக்கை, வைரம், கெம்பு, தங்கம், மின்னல் நகைகளைப் போட்டுக்கொண்டு குலுக்குநடை நடக்கவும், உங்கள் தாய், தங்கை, குழந்தைமார்கள் கிழிந்த ஜால்ரா துணி கட்டிக் கொண்டு ஒரு பக்கம் இழுத்தால் ஒரு பக்கம் நழுவும்படி, புல்லும், விறகும் சுப்பியும் சுமந்து தினம் 4, 5 மைல் நடக்கவும் ஆடு மாடு மேய்த்து, பால் தயிர் வெண்ணெய் சேர்த்து பார்ப்ப னர், பட்டணத்தவர் வயிறுகள் என் னும் டாங்கியில் கொட்டிவிட்டு எலும்புக்கூடு தெரியும்படி திண்டாடு கிறார்களே, ஏன்? என்று கேட்டீர் களா? ஒருவர் இருவர் மெத்தை வீடு கட்டிக்கொண்டு மோட்டார், குதிரை வண்டி வைத்துக்கொண்டு, பணம் சேர்த்து பிரபுவாகுமாறு, பார்ப்பான் இடம் கொடுத்துவிட்டால் போதுமா?

இப்போது தெரிகிறதா, சாமி பேராலும், சுயராஜ்யத்தின் பேரா லும் பார்ப்பனர் செய்யும் பித்த லாட்டமும், "சாமி இல்லை என்கிற வனும் நாட்டைக் காட்டிக் கொடுத்தவனுமான ராமசாமி வருகி றான், வரவேற்காதீர்கள், அவன் கூட்டத்திற்குப் போகாதீர்கள்" என்று பார்ப்பனர்களும் அவர்கள் அடிமைகளும் சுவர்களில் செம்மண் ணால் எழுதியதின் இரகசியமும்?— என்று கேட்கிறேன்."

இறுதியில் பெரியார் அவர்கள் மக்கள் யாவரும் சமஉரிமையாளராய் ஆகவேண்டுமென்பதற்காகவே பல எதிர்ப்புக்கிடையே தாமும் திராவிடர் கழகமும் பாடுபட்டு வருவதாகக்கூறி தமது பேச்சை முடித்தார்.

## அமைப்புக்கூட்ட அமைப்பு

26-1-47 திருச்சங்கோடு தாலுக்கா திராவிடர் கழகத்தின் சார்பாகத் திருச்சங்கோடு திராவிடர் கழகக் கட்டிடத்தில் திராவிடர் கழக அமைப் புக்கூட்டம் நடைபெறும். உறுப்பி னர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்தில்கலந்துகொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கி றேன்.

அன்பன்,
டி. கே. வெங்கடாசலம்,
செயலாளர், திராவிடர் கழகம்,
திருச்செங்கோடு.

## பொங்கல் திருநாள்

19-1-47ல் திருச்சங்கோடு திரா விடர் கழகத்தின் சார்பிலும், 14-1-47ல் கல்லுப்பட்டியிலும், தஞ்சை மானம்புச்சாவடி திருவள்ளு வர் கழகத்தின் சார்பிலும் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டது.

## அனுதாபம்

தாரமங்கலத்தில் 20 ஆண்டுக ளாகச் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுகொண்டவரும், திராவிடர் கழகத் தலைவருமான தோழர் பி.மே, வையாபுரி அவர்கள் தனது 76வது வயதில் 12-1-47 இரவு மாரடைப் பால் இயற்கை யெய்தியது குறித்து எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை அன் னார் குடும்பத்தாருக்குத் தெரிவித் துக்கொள்கிறோம்.

திராவிடர் கழகத்தார்,
தாரமங்கலம்.

## திறப்புவிழா

26-1-47 காலை 8-30 மணி கு நாமக்கல் தோழர் சி ஆ பழனி முத்தம்மாள் அவர்கள் இல்லத்தில் அஞ்சாமி ஆறுமுகம் முத்தமிழ் பகுத்தறிவுக்கொடி படிப்பகம்' என்னும் பெயரால் இலவசப் படிப்பகத்தின் திறப்பு விழா மூவலூர் தோழியர் ஆ. ராமாமிர்தத்தம்மாள் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ப. சுந்தரம் வரவேற்புரை ஆற்றுவார். தோழர் இரா. எழில்நிலவனார் 'புத்தவைப் பொன்மொழியார்' என்பதுபற்றியும் தோழர் எ. சித்தையன் 'கப்பலோட்டிய தமிழன்' என்பது பற்றியும், தோழர் குழந்தைச்சாமி 'பகுத்தறிவுகண்ட பெரியார்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றுவார்கள்.

## நாதன் & கோ திறப்பு விழா

22-1-47 மாலை 6 30 மணிக்கு ஈரோடு கச்சேரி வீதியில் எம். கே. குகநாதன், பி. சண்முகவேலாயும் ஆகிய தோழர்களால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட நாதன் & கோ என்ற புத்தகசாலையின் திறப்புவிழா பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கோவை மாவட்ட திராவிடர் கழகத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் மறைந்த தலைவர் என். அர்ச்சுனன் அவர்கள் படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர் தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி, பெரியார் அவர்கள் புத்தகசாலையைத் திறந்துவைத்து சுமார் ஒரு மணிநேரம் சொற்பொழிவாற்றினார். (சொற்பொழிவு விடுதலையில் வரும்)

திறப்புவிழாவிற்குச் சுமார் 1000பேர் வந்திருந்தனர். அன்று நடைபெற்ற கோவை மாவட்ட நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்திற்கு வந்திருந்த வெளியூர்த் தோழர்களும் விழாவில் கலந்துகொண்டனர். பின்னர் பி. சண்முகவேலாயுதம் நன்றி கூறினார். விழாவில் கலந்துகொண்டவர்களுக்குச் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்ட பின்னர் விழா முடிவுற்றது.

## தமிழ்த் திருநாள்

15-1-47 மாலை 6 மணிக்கு தோழர் எம். வாங்கிலியப்பன் அவர்கள் சார்பில் தோழர் எஸ். ஆர். முத்துசாமி அவர்கள் தலைமையில் 'தமிழ்த் திருநாள்' கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. கலைவாணன், ல சேதுராமன், உபதேசியார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தோழர்கள் ப. ல. திருமலைசாமி, உபதேசியார், மீனாட்சி ஐயா முத்துசாமி, ஜனாப் குத்தூஸ் பாவா முதலியவர்களால் இசையரங்கு ஒன்று நடைபெற்றது. இரவு 1 மணிக்குத் தோழர் ம. சி. திருமலைசாமி அவர்கள் நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

## வேண்டுகோள்

அன்புடையீர்! வணக்கம். செய்யாற்றுக்கு அடுத்துள்ள வாழ்குடை என்ற கிராமத்தில் சில ஆண்டுகளாகத் திராவிடர் கழகம் அரிய தொண்டாற்றி வருகின்றது. அத்திராவிடர் கழகத்தின் சார்பில் சுயமரியாதை இரவுப் பள்ளிக்கூடம் ஒன்று நடைபெற்றுவருகின்றது. அப்பள்ளியில் சுமார் 150 திராவிடக் காளைகளும் ஆதித்திராவிட மாணவர்களும் (பெண்கள் உட்பட) பயின்று வருகின்றனர். இவ்வேழைப் பிள்ளைகள் வசதியாகத் தங்கிக் கற்க ஒரு கட்டிடமுமில்லை. இக்குறையைப் போக்கவும், மேற்கொண்டு ஏழைச் சிறார்களைப் பள்ளியில் சேர்த்து கல்விகற்க ஏற்பாடு செய்யவும், திராவிடர் கழகம் சொந்தத்தில்லாததால் அக்குறையை ஒரு கூரைக்கட்டிடம் கட்டுவதின் மூலமாவது போக்கவும் ஏற்பாடு செய்கின்றோம்.

எனவே இதைக்காணும் தோழர்கள் அனைவரும் கருணைகூர்ந்து தங்களால் இயன்ற அளவு அன்பளிப்பும், நன்கொடையும் தந்தருளுமாறு வேண்டுகின்றோம்.

அன்புள்ள,

பூ. எஸ். கிருஷ்ணசாமி,

தலைவர் சு. ம. இரவுப் பள்ளிக்கூடம் & திராவிடர் கழகம், வாழ்குடை.

## வாழ்க்கை ஒப்பந்தம்

பெங்களூர் தேவர் ஜீவனஹள்ளியில் தோழர் வி. மாரிமுத்து அவர்கள் தலைமையில் தோழர் எம். முனுசாமி அவர்களும் தோழியர் கமலா தேவி அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். வி. எம். அண்ணாமலை, பி. எம். வேலாயுதம், எஸ். கே. கணேசன் ஆகிய தோழர்கள் சீர்திருத்த மணம் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். திருமணத்தின் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாயும், பெரியார் நகர் திராவிட கழகத்திற்கு 3 ரூபாயும் நன்கொடை யளிக்கப்பட்டது.

## மதிப்புரை

### 'திராவிடமும் ஆரியமும்'

தோழர் விவேகி அவர்களால் ஆக்கப்பட்ட 'திராவிடமும் ஆரியமும்' என்ற நூலைப் பார்வையிட்டோம்.

திராவிடநாடு தனியாகப் பிரிய வேண்டுமென்பதற்குத் தக்கக் காரணம் காட்டுகின்றார் இந்நூலாசிரியர். திராவிடநாட்டுப் பிரிவினையை நக்கல் செய்வோருக்குத் தக்க மாற்றம் இறக்கும் முறையிலுள்ளது இந்நூல். இந்நூலாசிரியரின் நோக்கம் திராவிட ஐக்கியக் குடியரசு அமைப்பதே' என்று குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இன்னும் காந்தீயத்தின் பித்தலாட்டங்களும், காங்கரஸ்காரர்களின் பித்தலாட்டங்களும் அலசிக் காட்டப்பட்டுள்ளன இந்நூலில். திராவிட ஐக்கியக் குடியரசுக்காகப் பாடுபடுவோருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை ஆகியோரின் படங்களும், திராவிடநாடு, திராவிட இயக்கக் கொடி ஆகியவற்றின் படங்களும், 'திராவிடமும் ஆரியமும்' என்ற இந்நூலின் முகப்பிதழில் அழகாக அச்சிடப்பட்டுள்ளன.

இதன் விலை 5-அணாதான்.

கிடைக்குமிடம்: திராவிட கலாநிலையம், 55, முத்தாருஞ்னிஸாபேகம் தெரு, மவுண்ட்ரோடு, சென்னை.

Edited, Printed, and Published by N Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.